### கொரோனா களப்பணியாளர்களின் பிள்ளைகளுக்கு

# கட்டணம் இல்லா கல்வி திட்டம்

## வேல்ஸ் வேந்தர் ஐசரி கணேஷ் அறிவிப்பு

**சென்னை, ஜூலை 21-** தமிழகத்தில் கொரோனா தடுப்பு பணியில் தன்னலம் கருதாமல் போராடும் களப்பணியாளர்களுக்கு உதவி செய்யும் வகையில் பல்லாவரம் வேல்ஸ் பல்கலைக்கழக வேந்தர் ஐசரி கே.கணேஷ், "வேல்ஸ் கட்டணம் இல்லா கல்வி" என்னும் திட்டத்தை அறிவித்துள்ளார்.

அதன்படி கொரோனா தடுப்பு பணியில் ஈடுபட்டு வரும் செவிலியர்கள், காவல் துறையினர் மற்றும் துப்புரவு பணியாளர்கள் ஆகியோரின் குழந்தைகள், இந்த கல்வி ஆண்டில் பிளஸ் 2 வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்தால் அவர்களுக்கு வேல்ஸ் பல்கலைக்கழகம் சார்பில் 50க்கும் மேற்பட்ட இளங்கலை பட்டப் படிப்பை முழுவதுமாக கட்டணமில்லாமல் படிக்கலாம். கொரோனா தடுப்பு பணியில் உயிர் நீத்தவர்களின் குடும்பத்தினருக்கு முன்னுரிமை வழங்கப்படும். இந்த வாய்ப்பை மாணவர்கள் பயன்படுத்தி கொள்ளலாம். மேலும் 9003461468 என்ற செல்போன் நம்பரிலும் தொடர்பு கொள்ளலாம். பல்கலைக்கழக ஊழியர்களை நேரில் அணுகியும் விவரங்களை தெரிந்து கொள்ளலாம்.



ஐசரி கே.கணேஷ்

இந்த அசாதாரண காலத்தில் நம்மை காத்து வரும் களப்பணியாளர்களுக்கு உதவி செய்யும்படி அனைத்து கல்வி நிறுவனங்களின் தலைவர்களையும், தனியார் பல்கலைக்கழக வேந்தர்களையும் அவர் கேட்டு கொண்டுள்ளார்.

தமிழ் முரசு
Tue, 21 July 2020
tm.dinakaran.com/c/53640848